

நேற்று முன்தினம் (27.01.2025) மாலை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்ற 'விழுப்புரம் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.1.2025) விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர் கி. அரிதாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று

# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், இன்று (29-1-2025 - புதன்கிழமை) காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : ஒன்றிய அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.1.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### வக்ஃபு வாரிய விவகாரம்: எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி கூட்டம்!

# நாடாளுமன்றக் கூட்டுக் குழு கேலிக்கூத்தாக மாறிவிட்டது!

## மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா கடும் கண்டனம்!



புதுடெல்லி, ஜன. 29-

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி இன்று வக்பு மசோதாவை இறுதி செய்ய நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் முயற்சி செய்வதாக ஆ.ராசா எம்.பி. குற்றம்சாட்டி உள்ளார்.

இது குறித்து பேட்டி அளித்த அவர், நாடாளுமன்ற கூட்டுக் குழுவை ஒன்றிய அரசு தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

சில நாட்களுக்கு முன்பு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், ஜே.பி.சி. தலைவர் மிகவும் பிடி வாதமாக இருக்கிறார் எங்களின் எதிர்ப்பையும் மீறி திருத்தங்கள் மீதான ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது

ஜே.பி.சி.யில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்துவிட்டனர், அதனை அவர்கள் நிறைவேற்றுவார்கள்என நான் கருதுகிறேன் ஜே.பி.சி. வெறும் கண் துடைப்பு நடவடிக்கையாக பயன்படுத்தப்படுகிறது. அது ஒரு கேலிக்கூத்தாக மாறிவிட்டது.

அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிப்பார்கள் என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆ.ராசா, பா.ஜ.க. எம்.பி. ஜெகதாம்பிகா பால் சர்வாதிகார போக்குடன் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற கூட்டுக் குழுவை ஒன்றிய பா.ஜ.க. அரசு தவறாக பயன்படுத்துவதாகவும் டெல்லி பேரவை தேர்தலை மனதில் வைத்து வக்ஃபு வாரிய விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுவதாகவும் புகார் கூறினார்.

### மனுக் கொடுக்க வந்த பெண்ணுக்கு குழந்தை கொடுத்த 'யார் அந்த சார்?"

# அ.தி.மு.க. "சார்" களை மறந்து விட்டீரா பழனிசாமி?

## போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தாக்கு!



சென்னை,ஜன.29-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை பெரம்பூரை சேர்ந்த பள்ளி சிறுமி தனது தோழியின் இல்ல விழாவிற்கு செல்வதாக கூறி சென்றவர் வீடு திரும்பவில்லை என்ற புகாரின் அடிபடையில் உடனடியாக வழக்கு பதிந்து தேடுதல் வேட்டையை துரிதப் படுத்தினர் காவல்துறையினர். மாணவியின் செல்போன் எண்ணை ஆய்வு செய்து அவரின் இருப்பிடத்தை கண்டறிந்த காவல்துறையினர் அங்கு சென்று சிறுமியை மீட்டுள்ளனர். மேலும் அவரோடு இருந்த இரண்டு பள்ளி சிறுமிகளையும் மீட்டுள்ளனர். மூன்று சிறுமிகளையும் காதலிப்பதாக கூறி அழைத்து சென்று பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுத்தியது விசாரணையில் தெரியவந்ததை அடுத்து குற்றவாளிகள் அனைவரையும் POCSO சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர் காவல்துறையினர். மேற்கொண்டு இவ்வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

புகார் பெறப்பட்ட உடனே விரைவாக செயலாற்றி பள்ளி மாணவிகளை கண்டறிந்து குற்றவாளிகளை கைது செய்துள்ளது தமிழ்நாடு காவல்துறை. முதலமைச்சரின் வழிகாட்டுதல் படி பெண்கள் தொடர்பான புகார்களுக்கு கடந்த அ.தி.மு.க. ஆட்சியை போன்று அலட்சியமாக இல்லாமல் தீவிரமாக செயலாற்றி வருகிறது தமிழ்நாடு காவல் துறை. மேலும் பாதிக்கப் பட்ட பெண்களுக்கு விரைந்து நீதி கிடைக்கும் வகையில் குற்றத்தின் மீதான விசாரணையை வேகப்படுத்தி குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனையை பெற்றுக்கொடுத்தும் வருகிறது திராவிட மாடல் ஆட்சி.

விரைவாக நடவடிக்கை எடுத்துவிட்டார்களே என்ற விரக்தியிலும் தனக்கு அரசியல் ஆதாயம் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலும் அலையும் எடப்பாடி பழனிசாமி வழக்கம் போல அரசை குறை கூறி அவதூறுபதிவு போட்டுள்ளார்.

"சார்"களை காப்பாற்றுவதில் கைதேர்ந்தவரான பழனிசாமிக்கு அ.தி.மு.க.வின்"சார்" களை நினைவிருக்கிறதா? அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க.வை சேர்ந்த 103-வது வட்டச்செயலாளர் சுதாகர் "சார் யார்" என மறந்து விட்டீரா பழனிசாமி.? பொள்ளாச்சி பாலியல் வன் கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க.வின் பொள்ளாச்சி நகர மாணவரணிச் செயலாளர் அருளானந்தம் "சார் யார்" என்பதை மறந்துபோனீரா பழனிசாமி.? மனு கொடுக்க வந்த பெண்ணுக்கு குழந்தையை கொடுத்த மந்திரி "சார் யார்" என்பது பழனிசாமிக்கு தெரியாதா? நடிகை சாந்தினி அளித்த பாலியல் புகாரில் கைதானாரே அதிமுக முன்னாள் அமைச்சர் மணிகண்டன் "சார் யார்" என்பது மறந்து போனதா?

நீங்கள் மறந்தது போல நடித்தாலும் தமிழ்நாட்டு மக்கள் ஒருநாளும் "அதிமுக சார்களை" மறக்க மாட்டார்கள். மொத்த பாலியல் குற்றவாளி "சார்"களின் புகழிடமாக அதிமுக வை வைத்துக் கொண்டு, பெண்கள் நலனிலும் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டு சிறப்பாக செயலாற்றி வரும் திராவிட மாடல் அரசை குறை கூறினால் அதை மக்களே ஏற்க மாட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மடல் ஆட்சி பெண்கள் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறதோ அதே அளவு முக்கியத்துவதோடு பெண்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது. முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது தமிழ்நாடு.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை அவனியாபுரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர்

# வழக்கறிஞர் கே.மணிசேகரன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜன.29

மதுரை தெற்கு மாவட்டம் அவனியாபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் கே.மணிசேகரன் மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மதுரை மாநகர் மாவட்டத்தில் மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றி, வட்டக் கழகச் செயலாளராகவும், தொடர்ந்து தற்போது அவனியாபுரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த வழக்கறிஞர் கே.மணிசேகரன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - மதுரை மாநகர் மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



வக்ஃப் திருத்த மசோதா மீதான நாடாளுமன்றக் கூட்டுக் குழுக் கூட்டம் புதுடெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற - மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா, எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.

# சாத்தனூர் அணையிலிருந்து விவசாயப் பாசனங்களுக்கு தண்ணீர்!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 29-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (27.1.2025) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கட்டில் இடது மற்றும் வலது புறகால்வாய்களில் இருந்து விவசாய பாசனங்களுக்கு தண்ணீர் திறந்து வைத்தார். இதில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ. பாஸ்கர பாண்டியன், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டத்தில் அமைந்துள்ள சாத்தனூர் அணையின் முழு நீர் மட்டம் 119.00 அடி, சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் முழு கொள்ளளவு 7321 மி.க. அடியாகும். இன்று காலை 8.00 மணி அளவில் சாத்தனூர் அணையின் நீர் மட்டம் 118.75 அடி மற்றும் முழு கொள்ளளவு 7264 மி.க.அடியாகும். அதன்படி, இன்றையதினம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சாத்தனூர் அணையிலிருந்து விவசாய பாசனங்களுக்கு தண்ணீர் திறந்து வைத்தார்கள்.

பாசன நீரை சிக்கனமாகவும், துறை பணியாளர்களின் அறிவுரைப்படியும் சிறந்த முறையில் பயன்படுத்தி நல்ல விளைச்சல் பெற்றிட எல்லா வகையிலும் ஒத்துழைக்குமாறு பாசன ஆயக்கட்டுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிவிக்கப்பட்ட தேதிக்கு மேலும் எக்காரணத்தைக் கொண்டும் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கும் தேதியை நீட்டிக்கப்படமாட்டாது.

அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சாத்தனூர் அணையிலிருந்து வருடந்தோறும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன்மூலம் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன் பெறுவார்கள். சாத்தனூர் அணையின் முழு நீர் மட்டம் 119 அடியாகும். கடந்த ஆண்டில் பெய்த தொடர் கனமழையின் விளைவாகவும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பெய்த கனமழையின் விளைவாகவும் சாத்தனூர் அணையின் முழு கொள்ளவு நிரம்பி, 1 இலட்சத்து 68 ஆயிரம் கன.அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

**110 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு!**

தமிழக அரசின் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விவசாய பயன்பாட்டிற்காக இன்றையதினம் சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது. இடதுபுற கால்வாயிலிருந்து வினாடிக்கு 320 கனஅடியும், வலதுபுற கால்வாயிலிருந்து வினாடிக்கு 200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும் இன்றையதினம் முதல் 17.05.2025 வரையிலான 110 நாட்களுக்கு தொடர்ச்சியாக தண்ணீர்; திறந்து விடப் படும். தற்போது, திறந்து விடப்படும் நீரானது ஜனவரி 27, 2025 முதல் 25 நாட்களுக்கு கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 46 கிராமங்களும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 58 கிராமங்களும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 15 கிராமங்களில் உள்ள மொத்தம் 119 கிராமங்கள் சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதன் மூலம் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பயனடையும். ஏறத்தாழ 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களின் உற்பத்திக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

பொதுவாக, விவசாயத்திற்கு அடிப்படை தண்ணீர் ஆகும். அந்த தண்ணீரை முறையாக சேமிப்பது மற்றும் முறையாக பயன்படுத்துவது என்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் பொதுப்பணித்துறையை பொதுப்பணித் துறைமற்றும்நீர்மேலாண்மைத் துறை என இரண்டாக பிரித்தார்கள். நீர்மேலாண்மைத்துறை மூலமாக தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீரை சீராக பாதுகாப்பதற்கும், விவசாயிகளின் உற்பத்திக்கு தேவையான தண்ணீரை முறையாக பயன்படுத்துவதற்கும் இந்த ஆட்சி பல்வேறு வகையில் விவசாய பெருங்குடி மக்களுக்கு உதவியாக உள்ளது. அந்த வகையில் நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் குறிப்பிட்ட காலங்களில் தண்ணீர் திறந்து விவசாயிகள் பயனடைய இந்நிகழ்வு இன்றையதினம் நடைபெறுகிறது என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் .

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, செயற்பொறியாளர் (நீ.வ.து) மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம் அறிவழகன், உதவி செயற்பொறியாளர், சாத்தனூர் அணை திரு இராஜாராமன், சாத்தனூர் அணை பிரிவு, சாத்தனூர் அணை உதவிப்பொறியாளர் சந்தோஷ், தென்முடியனூர் உதவிப்பொறியாளர் ராஜேஷ், உதவி பொறியாளர் ஸ்ரீ.செல்வபிரியன், சங்கராபுரம் உதவி செயற்பொறியாளர், (நீ.வ.து) திருமதி சுகந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒக்கியம் துரைப்பாக்கத்தில்

# அரசு மேல்நிலைப்பள்ளியில் 22,931 வது திறன்மிகு வகுப்பறை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

சென்னை, ஜன.29-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 27.1.2025 அன்றுஒக்கியம்துரைபாக்கம், அரசு மேல்நிலைப்பள்ளியில் 22,931வது திறன்மிகு வகுப்பறையினை நிறுவினார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர் நிலைமற்றும்மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தற்போதைய தொழில்நுட்ப உலகில் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் மாணவர்களை தயார்படுத்தும் பொருட்டு தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு எண்ணிய தொழில்நுட்ப விரிவாக்கத்தை (Digital Technology) முன்னெடுப்பு நிகழ்வாக கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு தற்போது மேற்கொண்டு வருகிறது.

புத்தகங்கள் மற்றும் கரும்பலகைகள் வாயிலாக நடைபெற்ற கற்றல் கற்பித்தல் நிகழ்வின் ஓர் உச்சமாக உரைகள், படங்கள், ஆடியோ மற்றும் வீடியோ போன்ற பல்வேறு வடிவங்களில் தகவலைப் பெற்று பாடப்பொருள்களை எளிதாகப் புரிந்துகொள்ளவும், பெற்ற தகவல்களைத் தக்க வைத்து கொள்ளவும் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தொழில்நுட்பத்துடன் பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்கவும் 22,931 திறன் மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) ரூ. 455.32 கோடி மதிப்பீட்டில் அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 11,76,452 மாணவர்கள் பயனடையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக அரியலூர், கடலூர், நாகப்பட்டினம், சேலம், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 493 அரசு தொடக்கப் பள்ளிகளில் 634 திறன் மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் 14.6.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கும் பணி நிறைவு பெற்றது.

இறுதி கட்டமாக, சென்னை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகளில் 27.01.2025 அன்று ஒக்கியம் துரைபாக்கம், அரசு மேல்நிலைப்பள்ளியில் 22,931வது திறன்மிகு வகுப்பறையினை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் நிறுவப்பட்டது.

இதை போன்று அரசு பள்ளிகளில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) ரூ. 519.73 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணி தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இவ்விருதிட்டங்களின் மூலம் அரசு பள்ளிகளில் பயிலும் 43,89,382 மாணவர்கள் பயனடைய உள்ளனர்

இவ்வாறு அரசு பள்ளிகளில் அமைக்கப்பட உள்ள திறன்மிகு வகுப்பறைகள் மற்றும் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் வாயிலாக கற்றல் கற்பித்தல் பணியானது எளிமையாகவும், எளிதில் மாணவர்களை கவரக்கூடியதாகவும், பாடப்புத்தகங்களில் உள்ள பாடப்பொருட்கள் மற்றும் அதன் தொடர்புடைய விவரங்களை ஆடியோ மற்றும் வீடியோ வாயிலாக பார்த்தும் கேட்டும் விரைந்து புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அமைய உள்ளது.

இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள் குழந்தைகள் நேய வகுப்பறைகளாக மாற்றியமைப்பதன் வாயிலாக ஆசிரியர்கள் இனி வரும் காலங்களில் ஆசிரியர்களாக மட்டுமின்றி ஒரு ஏதுவாளராகவும் செயல்படுவார்கள். இதன் வாயிலாக மாணவர்களின் கற்றல் திறன்கள், கற்றல் விளைவுகளை அடையும் திறன்கள் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், மரு.மா.ஆர்த்தி, ஒக்கியம் துரைபாக்கம், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ - மாணவியர் ஆகியோர் உடனிருந்தனர்.